திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே, பற்பல இடங்களில் இப்படிப்பட்ட சாக்கடைகளில் அடைப்பு இருந்ததைக் குறித்து நானே நேரடியாக சம்பந்தப்பட்ட ஆதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் இந்தக் கழிவு நீர் சாக்கடைகளைச் சுத்தப்படுத்துவதற்குரிய வண்டி இரண்டே இரண்டுதான் இருக்கின்றன என்ற தகவலைத் தந்தார்கள். இரண்டு வண்டிகள்தான் இந்தச் சென்னை நகரில் உள்ள எல்லா பகுதிகளுக்கும், அதாவது வட சென்னை, தென் சென்னை, போன்ற எல்லா பகுதிகளுக்கும் சென்று பணியினை மேற்கொள்கின்றன. ஆகவே அந்த வண்டியை அதிகரிக்க ஆவன செய்யப்படுமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் கேள்வி கேட்டபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்களுடைய தொகுதிக்கு வருவதாகச் சொன்னார்கள். என்னுடைய தொகுதி அதைவிட மிக மோசமாக இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதிக்கும் அவர்கள் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே முதலில் கேட்ட கேள்விக்குஓ தனிக் கேள்வி போடவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இரண்டாவது கேட்ட கேள்விக்கு வருகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நான் பல தொகுதிகளுக்குச் செல்ல இருக்கிறேன். ஏற்கெனவே பல தொகுதிகளுக்குச் சென்றும் இருக்கிறேன். அந்தந்த அமைப்புக்கள் கூப்பிட்டவுடன் செல்கின்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு நேரம் இல்லாமல் போய் விடுகிறது, ஆகவே இன்னும் பல இடங்களுக்கும் செல்ல இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் கலந்து அவருடைய தொகுதிக்கு வருவதற்கு, வந்து பார்வையிடுவதற்கு ஏற்பாடுகளை ஒரு நாள் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வினா. எண். 468, 469—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெற்றன.

கூவம் சீரமைப்புப் பணிகள்

* வினா எண். 470 திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூவம் சீரமைப்பு வேலைகள் ஆரம்பித்து எத்தனை ஆண்டுகள் ஆகியுள்ளது?

(ஆ) இதன் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு?

(இ) பின்னர் இப்பணி பாதியில் நிறுத்தப்பட்டதா?

(ஈ) இதனைச் சரி செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) கூவம் சீரமைப்பு வேலைகள் ஆரம்பித்து பத்துஆண்டுகள் ஆகியுள்ளது.

(ஆ) கடைசி திருத்திய மதிப்பீட்டுச் செலவு ரூ. 221.64 இலட்சங்கள்.

(இ) இல்லை,

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

* வினா எண்- 471 திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் கூவம் நதியினைச் சீரமைப்பதற்கு அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடந்த பத்தாண்டுக் காலத்தில் பல இலட்ச ரூபாய் செலவு செய்தும் கூவத்திலுள்ள நாற்றம் இன்னும் போகவில்லை. இந்த சென்னைப் பட்டணத்தில் பல இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் சுகாதாரமாக வாழ்கின்ற வகையில் மீண்டும் கூவத்திலுள்ள நாற்றத்தை அப்புறப்படுத்துவதற்கு ஏதேனும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே அளித்திருக்கின்ற விடையிலேயே விவரமாகச் சொல்லி இருக்கிறேன். ஏற்கெனவே கூவம் சீரமைப்பு திட்டம் என்ற பெயராலே ஒரு திட்டம் 1958-ம் ஆண்டிலே ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னாலே 4-7-1967-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலே 118 இலட்சம்